## சுருக்கம்

பள்ளிக் கல்வி – தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், ஒரு லட்சம் சதுர அடி பரப்பில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (பொது1(1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.26

நாள்: 22.02.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
மாசி 10
படிக்க:

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 046606/என்2/இ1/2017, நாள் 31.10.2017 மற்றும் 04.01.2018.

-----

**ஆணை:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன்கீழ் பள்ளிக் கல்வித் துறை சார்பாக பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல் தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின் விவரம் பின்வருமாறு:–

> “பள்ளிக் கல்வி இயக்ககம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக டி.பி.ஐ. வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இதனால், இதனை பராமரிப்பது கடினமாகவும், மிகுந்த செலவினம் கொண்டதாகவும் உள்ளது. அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து அலுவலர்களும், பணியாளர்களும் அதிக அளவு இங்கு வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்த இயக்ககத்தில் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்காக கூடுதல் இடவசதி தேவைப்படுகிறது. இதற்காக, ஒரு லட்சம் சதுர அடியில் 33 கோடி ரூபாய் செலவில் பள்ளிக் கல்வி இயக்கத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்” என்ற பெயரில் அழைக்கப்படும்”.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் மேற்குறிப்பிட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, தனது 16.10.2017 நாளிட்ட கடிதத்தில், கட்டட பொறியாளர்களுடன் கலந்தாலோசனை செய்வதற்கு முன், அரசு தேர்வுகள் இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் அவர்களுடன் ஆலோசனை கூட்டங்கள் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றதாகவும், அதன்படி புதிய கட்டடமானது ஒரு தளத்திற்கு 12000 சதுர அடி வீதம் 9 தளங்களுக்கு 1,08,000 சதுர அடியில் 9 மாடி கட்டடமாக அமையப் பெற உள்ளது என்றும், அதில் தரைத்தளத்தில் வாகனங்கள் மற்றும் அரசு ஊர்திகள் நிறுத்துமிடம், ஓட்டுநர்கள் ஓய்வு

அறை ஆகியவை அமையப் பெறவுள்ளது என்றும், இதர தளங்களில் மற்ற அலுவலர்களுக்கான அறை குறித்த விவரங்களையும் தெரிவித்து இக்கட்டட பணிக்கான நிதி ரூ.33 கோடியினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் அவர்களிடமிருந்து பெறவும் கட்டடப் பணிகளை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்வது குறித்தும் உரிய அனுமதி ஆணையை அளிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது 31.10.2017 நாளிட்ட கடிதத்தில் இக்கருத்துருக்கள் தொடர்பாக கீழ்க்கண்ட சில கூடுதல் விவரங்களை தெரிவித்துள்ளார்:–

(i) DPI வளாகத்தில் புதியதாக கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடமானது பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் உள்ள காலி நிலம். இப்பள்ளிக் கல்வி! இயக்கக கட்டடமானது மிகவும் பழமையானது. தற்பொழுது அக்கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளது. எனவே, இக்கட்டடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டடம் கட்ட உத்தேசிக்கப்படவில்லை.

(ii) தொன்மை வாய்ந்த Heritage கட்டங்கள் DPI வளாகத்தில் அமையப் பெற்றுள்ள நிலையில் இப்புதிய கட்டடம் கட்ட உரிய அமைப்புகளான CMDA, சென்னை மாநகராட்சி, State Heritage Committee ஆகியவற்றின் அனுமதி / அங்கீகாரம் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) புதிய கட்டடத்தில் பள்ளிக் கல்வி இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன அலுவலர்கள் சார்பாக பணித்தளம், மூன்று இணை இயக்குநர்களுக்கான அறைகள், பணியாளர்கள் பணித்தளம், பார்வையாளர்கள் மின்தூக்கி, கணினி அறை, நூலக அறை, ஆவணக் கூடம், பாதுகாப்பான அறை, கழிவறைகள் அமையப் பெற உள்ளது. மேலும், ஒரு தளத்தில் பொதுவாக வரவேற்பறை, உடற்பயிற்சி கூடம் (ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக) மற்றும் மருந்தகம் ஆகியவை அமையப் பெற உள்ளது. அதில் கூட்டரங்கம், பணியாளர்களுக்கு உணவு உண்ணும் கூடமும் அமையப்பட உள்ளது.

(iv) அரசு தேர்வு இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலம் தேர்வு செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டு கட்டட பணிக்காக பூமி பூஜை செய்யப்பட்டுள்ளதால் ஒருங்கிணைந்த கட்டடத்தில் அரசு தேர்வு இயக்ககத்திற்கு இடம் அளித்திட வாய்ப்பு இல்லாத சூழல் உள்ளது.

(v) முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித் துறை அவர்களிடமிருந்து பெறப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.33 கோடிக்கான வரைவு மதிப்பீடு இணைத்தனுப்பப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிக்கல்வி இயக்குநர் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளருடன் 21.12.2017 அன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், மேற்காணும் பணிக்காக ரூ.33.00 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்க உத்தேசித்திருந்த நிலையில், தற்போது முழு அறைகலன்கள் அமைப்புடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.39.90 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்குமாறும் கோரியுள்ளார்.

4. இது தொடர்பாக திருத்திய மதிப்பீட்டு விவரத்தினை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| Floor Details | Area in sq.m., | Accomodation provided |
|---|---|---|
| Stilt Floor | 1589.00 | Parking area, Ladies toilet, Lobby, Differently abled toilets, Gents toilet, Electrical room, Service room. |
| First Floor | 1589.00 | Office, Working area, recreation hall, Meeting hall, Director room, Joint Director 1 & 2 rooms, Dining area, wash, pantry, Ladies toilet, Lobby, Differently abled toilets, Gents toilet, Electrical room, Service room. |
| Second Floor | 1589.00 | Office, Library, Lockers, Reprographics, Reading areas, Financial advisor & controller, Librarian, Waiting, Joint Director Room, Deputy Director 1 & 2 Rooms, Differently abled toilets, Gents toilet, Dining area, Wash, Pantry, Ladies toilet, Lobby, Differently abled toilets, Electrical room, Service room. |
| Third Floor | 1589.00 | Office, Research centre, processing company, stationary storage, computer service room, HOD, Member secretary, Joint Member Secretary 1 & 2, Record and store, Dining area, Wash, Pantry, Ladies toilet, Lobby, Differently abled toilets, Electrical room, Service room. |
| Fourth Floor | 1589.00 | Library, Video conference room, Computer room, Record and storage, Pantry, A.V.Room, Discussion hall, Accounts Officer, Law advisor, Waiting, Deputy Director, Member college & School, Ladies toilet, Lobby Differently abled toilets, Electrical room, Service room. |
| Fifth Floor | 1589.00 | ETV studio, production staff, satellite uplinking, video editing, video studio, Engineering wing, Ladies toilets, Lobby, Differently abled toilets, Electrical room, Service room. |
| Sixth Floor | 1589.00 | SIEMAT conference hall for 300 members, 60 members, store room, pantry room, A.V.Room, Ladies toilets, Lobby, Differently abled toilets, Electrical room, Service room. |
| Portico | 138.02 | |
| Head room and LMR | 131.50 | Staircase head room, Machine room. |

Total 11392.52 sq.m
Or 122583.52 sq.feet

5. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன் கீழ் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பான ரூ.33.00 கோடி செலவில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும். இக்கட்டடம் மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில் “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடம்” என்ற பெயரில் அழைக்கப்படும் எனும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பள்ளிக்கல்வி இயக்குநரின்

கருத்துருவினை ஏற்று, முழு அறைகலன்கள் அமைப்புடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கான பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.39.90 கோடிக்கான (ரூபாய் முப்பத்தொன்பது கோடியே தொன்னூறு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீட்டினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று கட்டடப் பணிகளை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளலாம் என நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.9409/கல்வி–II/2018, நாள் 22.02.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தலைமைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, சென்னை –5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு துணை முதலமைச்சர்
அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின்
தனிச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை,
சென்னை–9.
நிதித் (கல்வி–II (வரவு செலவு / பொது–I/II) துறை,
சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை–9.
அரசு தலைமை கணக்காயர், சென்னை–18.
மண்டல தணிக்கை அலுவலர், சென்னை–9.
இ.கோ / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.